ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

16. துபாய் சர்வதேச தொழில் கண்காட்சியில் தமிழக அரங்கைத் தொடங்கி வைத்தல் மற்றும் தொழில் முதலீடுகளை ஈர்க்க வெளிநாடுகளில் பயணம் மேற்கொள்ளும் முதலமைச்சருக்கு பேரவைத் தலைவரின் வாழ்த்துரை மற்றும் முதலமைச்சரின் ஏற்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர்

அவர்கள் துபாய் நாட்டில் நடைபெறுகின்ற சர்வதேச தொழில் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கும், தமிழர்களின் சார்பில் தமிழக அரங்கை ஆரம்பித்து வைப்பதற்கும், தொழில் முதலீட்டாளர்களிடம் MoU ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, தொழில் முதலீட்டாளர்களிடமிருந்து மூலதனத்தைப் பெற்று வருவதற்காகவும் வெளிநாடு செல்லவிருக்கின்றார்கள். அவர்களுக்கு என் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன்.

பிற்பகல் 12—20

இந்த பத்து மாத கால ஆட்சியில், இந்தியாவில் உள்ள "இந்தியா டுடே" பத்திரிகை இந்தியாவில் தலைசிறந்த முதல்வர் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் என்று ஒரு பெருமையைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு, அது எனக்குப் பெருமை சேர்ப்பதைவிட, தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்திற்கு வந்தது என்பதுதான் எனக்குப் பெருமை என்று சொன்னார்கள்.

இந்த பத்து மாத கால ஆட்சியில் நடந்ததையே நான் நினைவுபடுத்திப் பார்க்கின்றேன். உலக அளவில் செஸ் போட்டியானது உலகத்தின் பல நாடுகளிலும் நடைபெற்றது. தற்போது, இந்தியாவில் செஸ் போட்டி நடைபெறுவதற்கு அனுமதி அளித்திருக்கின்றார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்தில் இந்தப் போட்டியை நடத்தினால் அமைதியாக, பாதுகாப்பாக, எல்லா நாட்டுக்காரர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கின்ற மாநிலம் எது என்று கேட்டபோது; தமிழ்நாடுதான் சிறந்தது என்று தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்.

இது இந்த 10 மாத கால ஆட்சிக்குப் பெருமை சேர்த்திருக்கிறது என்றால், அது மிகையாகாது. அதுமட்டுமல்ல, நேற்று நம்முடைய இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் ஆசிரியர்கள், ஆயுதப்படை அதிகாரிகள், அதேபோன்று குடிமைப்பணி ஆசிரியர்கள், அதிகாரிகள், நம்முடைய நட்பு நாடான, ஆஸ்திரேலியா, ஈரான் உட்பட பல நாடுகளில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து, ஓர் ஆய்வு செய்து எந்தெந்த மாநிலம் எவ்வாறு இருக்கிறது, பாதுகாப்பு எந்த நிலையில் இருக்கிறது, இந்தியத் திருநாட்டினுடைய பாதுகாப்புக்குத்

துணையாக எந்தெந்த மாநிலங்கள், எந்த அளவில் பாதுகாப்பாக இருக்கின்றன என்று அந்த ஆய்வுப் பணிக்காக உலகம் முழுவதும் இருந்து வந்த அதிகாரிகள் நம்முடைய ஆளுநரைச் சந்தித்தபோது, நம்முடைய ஆளுநர் அவர்கள் அதற்கு ஒரு பதிலை அருமையாக இரண்டு வார்த்தைகளில் சொல்லியிருக்கின்றார்; அதாவது, "அமைதி, நல்லிணக்கம்" இதற்கு எடுத்துக்காட்டு தமிழ்நாடு (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர் சொல்லியிருப்பது, தமிழ்நாட்டிற்குப் பெருமை மட்டுமல்ல; நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தச் சூழ்நிலையில்தான் வெளிநாட்டிற்கு முதலீட்டாளர்களை ஈர்க்கச் செல்கின்றார்கள் என்றால், அது தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு நிச்சயமாக ஓர் ஆக்கபூர்வமான பணியாகத்தான் இருக்கும் என்பதை தமிழ்நாட்டில் யாரும் மறுப்பதற்கு இல்லை.

ஆகவே, அப்படிப்பட்ட ஓர் அருமையான சூழலில் செல்கின்றார்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழக முதலீட்டாளர்களை முதலில் அழைத்து, நான்கு முறை முதலீட்டாளர்கள் கூட்டங்களை நடத்தி, ரூ.62,000 கோடி நிதியைப் பெற்று, 1,90,000 பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தது பெருமையான ஒரு நிகழ்வாக இளைஞர்கள் மத்தியில் இருக்கிறது.

குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள்மூலம் 29 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.507 கோடி நிதியைப் பெற்று 5,000 பேருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றதும், நம்முடைய இளைஞர்களுக்கு சந்தோஷமான செய்தி.

அதோடுமட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வேலைவாய்ப்பு அலுவலர்களோடு பல நிறுவனங்களும் இணைந்து, தனியார் வேலைவாய்ப்பை ஊக்குவித்தார்கள். அந்த அடிப்படையில், கிட்டத்தட்ட 50,000–க்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்தச் சூழலில் வெளிநாட்டுக்குச் செல்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல இலட்சம் தமிழக இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றவண்ணம் முதலீட்டைப் பெற்று வருவார்கள் என்று இந்தச் சபையிலுள்ள அனைவரின் சார்பாகவும் வாழ்த்தி, நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய வாழ்த்தோடு, என்னுடைய வாழ்த்தையும் சேர்த்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12—25

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களும் பதிலுரையாற்றி, இந்த அவையில் இருக்கக்கூடிய அனைவருடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பெற்றிருக்கிறார்கள். இந்த அரசு மிகச் சிறப்பாக பல திட்டங்களை, பல பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்று பல்வேறு மாநிலங்களில், ஏன் வெளிநாடுகளில்கூட இருப்பவர்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப் பெருமைப்படுகிற அளவிற்கு வந்துகொண்டிருக்கக்கூடிய செய்திகளையெல்லாம் நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம்.*

எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவு துறைகள் இருந்தாலும், முக்கியமான துறை நிதித் துறைதான். அந்த நிதித் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர், என்னுடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் மிகச் சிறப்பான வகையில், தன்னிடத்தில் இருக்கக்கூடிய அனுபவங்களைக்கொண்டும், வெளிநாடுகளில் தாம் பெற்றிருக்கக்கூடிய பல நல்ல அம்சங்களையெல்லாம் மனதில் தேக்கிவைத்துக் கொண்டும், அந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், உள்ளபடியே பாராட்டுக்குரியவராக அவர் விளங்கிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோலத்தான் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் 'வேங்கையின் மைந்தன்' என்று பெயர் பெற்றவர் அவர். இப்பொழுது 'வேங்கையின் மைந்தன்' மட்டுமல்ல; விவசாயிகளுடைய மைந்தனாகவும் மாறி, (மேசையைத் தட்டும் ஒலி) அவரும் தன்னுடைய கடமையைச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார். இது ஒவ்வோர் ஆண்டும் தொடர வேண்டும். அவர்கள் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கிறது. அதை அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற உணர்வோடு, அவர்களை வாழ்த்தி, அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இலங்கைத் தமிழர்கள் இன்றைக்கு பல துன்பங்களுக்கு, துயரங்களுக்கு ஆளாகியிருக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கு பரிதவித்துக்கொண்டிருக்கக்கூடிய தமிழர்கள் அண்மையில் தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்ற செய்திகளையெல்லாம் நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதுகுறித்து நேற்றையதினமே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதோடு, இது தொடர்பாக, ஒன்றிய அரசிடமும், அங்கிருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலும், அமைச்சர்களிடத்திலும் தொடர்பு கொண்டு, இதை எப்படிக் கையாள வேண்டும் என்று சட்டரீதியாக நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, விரைவில் அதற்குரிய விடிவுகாலத்தை நிச்சயமாக தமிழக அரசு ஏற்படுத்தித் தரும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், இங்கிருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள், உறுப்பினர்கள், நான் மேற்கொள்ளவிருக்கக்கூடிய துபாய், அபுதாபி பயணத்திற்கு வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் நான் உறுதியோடு சொல்கிறேன். பல நிகழ்ச்சிகளில் நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இந்தியாவிலேயே Number One முதலமைச்சர் என்ற அந்தப் பாராட்டைப் பெறுவதிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், அதைவிட எனக்கு பெருமகிழ்ச்சி எதுவென்றால், இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லக்கூடிய அளவிற்கு நம்முடைய தமிழகம் வர வேண்டும்; அந்த அடிப்படையில்தான் நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். எனவே, அப்படிப்பட்ட அந்த வெற்றிக்கு நான் இன்று மாலையிலே மேற்கொள்ளவிருக்கக்கூடிய துபாய், அபுதாபி பயணம் நிச்சயம் துணை நிற்கும். அதற்கு நீங்கள் வாழ்த்தியிருக்கிறீர்கள். வாழ்த்திய நெஞ்சங்களுக்கு மீண்டும் என்னுடைய சார்பிலே நன்றி தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)